## நீங்கள் Aide aux Migrants ஆல் கவனிக்கப்படுகிறீர்கள்
## இத்தகவல்கள் உங்கள் தொடர்பானவை

*அடுத்த மாதத்துக்கான நிதி நலன்கள் வழமையான நேரங்களில் வழங்கப்படும். பகிர்வுத் தங்குமிட நிலையங்கள் திறந்துள்ளன.*

*கொரோனாவைரசு தொடர்பான தற்போதைய நிலை எப்படியிருப்பினும்,* Hospice général *அதன் பயனடைவோருக்கு ஆதரவளிப்பதைத் தொடர்கிறது.*

*சுகாதாரக் காரணங்களுக்காக,* Hospice général *அதன்* Eugène-Lance and Bouchet *சமூக நிருவாக அலகுகளைத் தற்காலிகமாக மூடுகிறது, ஆனால் உங்கள் சமூக சேவகர்கள் தொடர்ந்தும் உங்கள் விசாரணைகளுக்குப் பதிலளிப்பர். அவர்களை தொலைபேசி, மின்னஞ்சல், வட்ஸ்அப் என வெவ்வேறு முறைகளில் தொடர்பு கொள்ளலாம்.*

***அடுத்த மாதத்துக்கான நிதி நலன் வழமையான நேரங்களில் வழங்கப்படும். ஆவணங்கள் இல்லாத போதிலும், கொடுப்பனவு எதுவும் தடுக்கப்பட மாட்டாது.***

*ஆயினும், நீங்கள் எமக்கு உங்கள் ஆவணங்களை வழங்க விரும்பினால்* (PDF, .doc, .docx, .jpeg *அல்லது வேறு வடிவத்தில்*), *உங்கள் அலகுக்கான பொது முகவரிக்கு ஒரு மின்னஞ்சலை அனுப்புங்கள். உங்களுக்கு ஒரு மின்னஞ்சல் முகவரி இல்லாவிடின், நீங்கள் உங்கள் திறன்பேசியின் மூலம் எமக்கு உங்கள் ஆவணங்களை அனுப்பலாம்.*

*உங்களால் உங்கள் சமூக சேவகரை அழைக்க முடியாவிடின், நீங்கள் அவசர உதவி எண்ணை அழைக்கலாம்:*

**022 420 58 98**

***திங்கள் முதல் வெள்ளி வரை, காலை* 10:00 - *மாலை* 3:00**

*புகலிடம் கோருவோருக்கான சமஷ்டி நிலையங்களைச் சேர்ந்தோர் காலை* 8:30 – *நண்பகல்* 12 *இற்கும் பின்னேரம்* 1:30 - 5:00 *இற்குமிடையில்* Bouchet unit, Avenue de Meyrin 49, 1203 Geneva *இலுள்ள வரவேற்புக் கூடத்துக்குச் சென்றாக வேண்டும்.*

***பகிர்வான தங்குமிட நிலையங்கள் வாழிடங்களாக இருப்பதுடன் திறந்துள்ளன.***

*ஒரு* Hospice général *ஊழியர் குழாம் நிலையப் பராமரிப்பையும் அஞ்சல் விநியோகத்தையும் கவனித்துக் கொள்கிறது. இவ்வணி தற்போது ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிலையத்திலும் காணப்படுகிறது.*